உ





இயக்கச்சியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்
தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான

# அமரர் அருணாசலம் கந்தையா

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 03.03.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



இயக்கச்சியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும்

தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான

# அமரர்.அருணாசலம் கந்தையா

அவர்களின் சிவப்பேறு குறித்த

நினைவு மலர்

**03.03.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பிற்கும் அரவணைப்பிற்கும் இலக்கணமாய் சிவவழிபாட்டுடன் அம்பாள், கிருஸ்ணர், பிள்ளையார், முருகன், நாகதம்பிரான் ஆகிய தெய்வங்களின் பக்தனாய் வாழ்க்கைத் தத்துவங்கள் பலவும் காட்டி மனதார வாயார நல்வார்த்தைகள் பேசி வையத்தில் நல்மக்களாக நாம் வாழ கலையாத கல்விதனை எமக்கூட்டி பெறா மக்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டி நட்புடனே அல்லற்படும் நோயாளியை சித்த மருத்துவ வித்தையாலும் கொடிய விசத்திலிருந்து உயிர்காத்த உத்தமனாய், காவலனாய், வையத்தில் நாம் நலமாக வாழ்ந்திட எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றும் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க" என இறுதி மூச்சுவரை வாழ்த்தி இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம் அருணாசலம் கந்தையாவிற்கு இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



உதயம்
08.06.1930

மறைவு
01.02.2021

அமரர்

# அமரர்.அருணாசலம் கந்தையா

## அவர்களின் திதிவெண்பா

சேர்ந்த சார்வரி வருடம் சிறந்த தைமாதத்தில்
போன்ற அமர் பட்சத்தில் சதுர்த்தியிலே – வாய்த்தபுகழ்
கந்தையா பேரான் கவின் உலகம் இங்கு விட்டு
எந்தை சிவன்தாள் சேர்ந்தான் ஏத்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

கணபதி என்றிடக் கலங்கிடும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கருமம் இல்லையே

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினை சுருக்கும்
புழுத்தலை புலையனேன் தனக்குச்
செம்மையேயாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கென பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஔிர்வளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்தில் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளது ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
தெளிவளர் தெய்வக்கூத்து உகந்தாயே
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கு
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டி நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கிழிருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வை தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானை கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவில்லா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

## தேற்றம்

பிறக்கும் உயிரெல்லாம் பெரும் வினையைத்தானறுத்து
இறக்கும் என்பதுவே இறைவகுத்த விதியாகும்
சிறக்கும் நல்வாழ்வு வாழ்ந்த பெருமகனார்
பேரின்பம் தேடினார் தேறு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# அருணாசலம் கந்தையா

அவர்களின்

## வாழ்க்கைச் சுவடுகள்

**பிறப்பு : 08.06.1930 இறப்பு : 01.02.2021**

சிவபூமி என விளங்கும் ஈழத்திருநாட்டில் வடபால் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் தென்னை பனையொடு செந்நெல் விளையும் தோவண்டை இயக்கச்சியில் நல்ல மாப்பனார் பரம்பரையில் இயக்கச்சி சின்னப்பு உடையாரின் அன்புப் பேரன் சின்னப்பு உடையாரின் அன்பு மகள் பார்வதிப்பிள்ளை அருணாசலம் தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாக 08.06.1930ல் இவ்வையகத்தில் வந்துதித்தார். இவரின் சகோதரர்களாக சரஸ்வதி, வேலுப்பிள்ளை, வள்ளியம்மை, மயிலாத்தை ஆகியோரும் வந்துதித்தனர்.

செல்வச் செழிப்புடன் தாய், தந்தை அரவணைப்புடன் சகோதரர்களுடனும், தாத்தாவுடனும் வாழும்போது முதலில் தந்தையாரையும் தொடர்ந்து தாயாரையும் இளம் வயதிலேயே இழந்து விட்டார். தாய், தந்தையர் இல்லாக் குறையை சிறிய தாயார் சின்னத்தங்கச்சியும் கணவரும் ஈடுசெய்து அன்புடனும் வழிகாட்டலுடனும் தன்பிள்ளைகளோடு வளர்த்து வந்தனர். சிறிய தாயாரின் பிள்ளைகளான சிதம்பரம், சீதேவன், தெய்வானையம்மன், கிருஷ்ணபிள்ளை, விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம் ஆகியோரிடம் பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார். அவர்களும் முத்தண்ணை என இன்றுவரை அழைத்து வந்தனர். அயற் கிராமத்தில் வசித்துவரும் அன்பர்கள் கந்தையா அண்ணை என்றும் மூத்தாம்பி அண்ணை என்றும் அழைத்ததுண்டு.

இயக்கச்சி அ.த.க பாடசாலையில் கல்வி கற்றார். தாத்தாவை (சின்னப்பு உடையார்) குருவாகக் கொண்டு சித்த மருத்துவத்தினையும், விசகடி வைத்தியத்தினையும் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பியாருமாக கற்று தேர்ச்சி பெற்றிருந்தனர். விவசாயத்தையும் கமத்தொழிலையும் செய்வதோடு "மக்கள் சேவையே மகேசன் சேவை" என சுயவிருப்புடன் சித்த மருத்துவத்தினையும் 30 வருடங்களுக்கு மேலாக செய்து அயலூர் மக்களின் உள்ளத்தில் குடிகொண்டார்.

மூத்தோர் சொல்லைத் தட்டாதே எனும் முதுமொழிக்கிணங்க வாழ்ந்து ஒழுக்க சீலராக விளங்கினார். சிறுவயதில் துவிச்சக்கர வண்டி ஓட்ட முயன்றவேளை தாத்தா ஒரு போதும் ஓட வேண்டாம் எனக் கூறியதை தேவவாக்காகக் கொண்டு வாழ்ந்தார். தாத்தா வழிபட்டு வந்த தெய்வங்களான கண்ணகியம்மன், பிள்ளையார், மல்வில் கிருஷ்ணன் கோவில் என்பவற்றை தானும் குலதெய்வங்களாக வழிபட்டு வந்தார்.

இடைக்காட்டில் வாழ்ந்த சின்னையாவிற்கும் இயக்கச்சி கதிராசிப்பிள்ளைக்கும் மூன்றாவது பிள்ளையாக பிறந்த சின்னத்தங்கம் எனும் நல்லாளை கரம்பிடித்து இல்லறமே நல்லறமென வாழ்ந்தார். இல்லற வாழ்க்கைப் பயனாக மனோன்மணி, சேதுகாவலர், காந்தரூபி, சறோஜினிதேவி, தங்கேஸ்வரன், மனோறஞ்சிதமலர், நகுலேஸ்வரன், வனஜா, கிரியா என நவ மணிகளை பெற்றெடுத்து பாசத்துடன் கல்வி கற்க வைத்து உயர்ச்சி கண்டு மகிழ்ந்தார். மூத்தமகன் சேதுகாவலர் கல்விகற்கும் காலத்திலேயே தந்தையாருக்கு ஒத்தாசையாக விளங்கினார். தந்தையின் தேவையறிந்து ஐயா, நான் வெளிநாடு சென்று உழைக்க விரும்புகிறேன் எனக் கேட்டபோது மனமுவந்து வழியனுப்பினார். மகனும் தனது சகோதரர்கள் மீது கொண்ட பாசத்துடனும், கடமையுணர்வுடனும் செயற்பட்டு தன் இரு தம்பிமாரையும் கனடாவிற்கு அழைத்து வாழ வழிகாட்டியாக விளங்கினார்.

மூத்தமகளுக்கும் உரிய வயதில் வாரித்தம்பி மகன் அதிட்டலிங்கத்தினை மணமுடித்துவைத்து பேரப்பிள்ளைகளைக்கண்டு களித்தார். தனது சகோதரர்களின் பிள்ளைகளுக்கும், மனைவியின் உடன்பிறவாச் சகோதரியின் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும் தன்னால் இயன்ற ஒத்தாசைகளையும் உதவிகளையும் செய்து மகிழ்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987-1992ம் ஆண்டு காலப்பகுதியில் ஆனையிரவுப் பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சொத்து சுகங்களை இழந்து பிள்ளைகள், பெறாமக்கள், உறவினரோடு கொம்படிக் கடற்பாதையினூடாக வந்து வட்டக்கச்சிப் பிரதேசத்தில் தற்காலிகமாக ஐந்து வருடங்கள் வாழ்ந்தார். தன் நான்கு பெண் பிள்ளைகள் ஆசிரியர்களாக வலம் வருவது கண்டு பூரித்தப் போனார். மூத்தமகனுக்கு வளலாய் யோகேஸ்வரியையும், மூன்றாவது மகளுக்கு கண்டாவளை காசிலிங்கத்தையும், நான்காவது மகளுக்கு கொடிகாமம் மகேந்திரனையும், ஐந்தாவது மகனுக்கு கோப்பாய் சந்திரவதனியையும், ஆறாவது மகளுக்கு குளவிசுட்டான் தனபாலசிங்கத்தையும், ஏழாவது மகனுக்கு அளவெட்டி கார்த்திகாவையும், எட்டாவது மகளுக்கு மாசார் சிறீகரனையும், ஒன்பதாவது மகளுக்கு யாழ்ப்பாணம் கபிலனையும் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்த மகிழ்வடைந்தார்.

மகன்மாரின் விடாமுயற்சியால் 1997ம் ஆண்டு மனைவியுடனும் கடைசி மகளுடனும் கனடா சென்று ஆண் பிள்ளைகளுடனும் பெண் பிள்ளைகளுடனும் சிறப்பாக வாழ்ந்தார். கனடாவில் இருபெண்பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து மகிழ்வடைந்தார். இளையமகனையும் இந்தியாவிற்கு அனுப்பிவைத்து திருமணக்காட்சியைக் கண்டுகளித்தார்.

பிள்ளைகளின் இல்வாழ்க்கைப்பயனாக ரோகினி, நிதர்சன், அனோஜன், சஜிதன், அபிநயா, சங்கீர்தன், தனுசா, புருஸ்சோத்தமன், கிருபன், விதுஜன், சங்கவி, தர்சன், திவாகரன், மதுரா, ஆதித்தியன், ஆரிஷா, சாரங்கன், தனுஷ், அபிரா, எய்டன்அக்சன், காவின்கோபி ஆகிய பேரக்குழந்தைகளை கொஞ்சி மகிழ்ந்ததுடன் அவர்களின் மங்கலவைபவங்களையும் உயர்வுகளையும் கண்டும் அறிந்தும் பூரிப்படைந்தார்.

2018ம் ஆண்டு தனது இளைய மகன் குடும்பத்தினரோடும் மனைவியையும் அழைத்தக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வருகை தந்து தன் பிள்ளைகளையும் மருமக்களையும் பேரக்குழந்தைகளையும் கண்டு மகிழ்வெய்தி உற்றார் உறவினர் நண்பர்களுடன் உறவாடி உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டார். கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்து இன்புற்று மீண்டும் கனடா சென்று தன் பிள்ளைகளோடு வாழ்ந்து வந்தார். 2020ம் ஆண்டு உலக நாடுகளில் பரவிவரும் கோவிட்-19 வைரசு நோய் காரணமாக தொடர்புகள் முடக்கப்பட்டிருந்தமையினால் அருகிலிருக்கும் பிள்ளைகளைக் கூட அடிக்கடி காணமுடியவில்லை என்று ஏங்கித்தவித்தார். ஜேர்மனியில் இருக்கும் மூத்தமகளின், மகளின் திருமணத்திற்குக் கூட போகமுடியவில்லை என மனவருத்தம் கொண்டார் எனினும் இணையவழியினூடாக கண்டு மகிழ்வடைந்தார்.

முதுமையின் காரணமாக உடலில் தளர்ச்சியும் சோர்வும் ஏற்பட்டதனால் 15 நாட்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், மைத்தினிமார்கள் ஆகியோரோடு தொலைபேசியினூடாகப் பார்த்துக் கதைத்தார். மூத்த பேரனின் (தர்சன்) திருமணத்தைக் கூட 23.01.2021ம் திகதி இணையவழியினூடாக பார்த்து மகிழ்ந்து வாழ்த்துக்கூறினார்.

மூத்தமகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டதை உணர்ந்த மனைவி பிள்ளைகளை வரவழைத்தார். பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் கண்ட மகிழ்ச்சியில் ஆனந்தமாகச் சிரித்து ஓரிரு வார்த்தைகள் பேசினார். மூத்தமகன் கையால் பால் பருக்கிய போது "மளமள" என குடித்ததைக் கண்ட பிள்ளைகள் ஐயாவுக்கு சுகம் வரும் என்று நம்பிக்கையுடன் வீடு சென்றனர். எனினும் காலதேவன் குறிப்பறிந்து நித்திரையில் இருக்கும் அவரை காத்திருந்த வேளை 01.02.2021 காலை 6.30 மணியளவில் மனைவியும் மருமகளும் அருகிருக்க சங்கடகர சதுர்த்தியில் இவ்வுலக வாழ்க்கையை நீங்கி இறைவனடி சேர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை
# அமரர் அருணாசலம் கந்தையா

இயக்கச்சியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமான அமரர் அருணாசலம் கந்தையா அவர்கள் தனது வாழ்வின் பிற்காலத்தில் பிள்ளைகளின் வேண்டுதலை அனுசரித்து கனடா நாட்டிற்குச் சென்று தனது மகள் கிரிஜாவுடனும் மற்றும் பிள்ளைகளுடனும் வாழ்ந்து வரும் போது பெப்ரவரி 1ம் திகதி அமரத்துவமடைந்த செய்தி கேட்டு தீரா மனக்கவலை அடைந்தோம்.

அமரர் இயக்கச்சிக்கிராமத்தில் அனைவராலும் நன்கு அறியப்பட்ட சின்னப்பு உடையாரின் பேரனாவார். அத்துடன் அருணாசலம் பார்வதிப்பிள்ளை ஆகியோரை தந்தை தாயாக உடைய பெருமையுடையவர். ஆமரரின் வாழ்க்கைப்பண்புகள் எப்போதும் தந்தை தாயாரை பெருமை கொள்ள வைத்தது. அத்துடன் இயக்கச்சிப் பிரதேச மக்கள் அனைவராலும் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கும் ஒருவராகவும் அமரரது வாழ்க்கை அமைந்திருந்ததை அவரின் மரணச் செய்தி கேட்டு துக்கம் அனுஷ்டித்த அனைவரும் எடுத்துக்கூறி வருகின்றனர்.

அமரர் உன்னத வாழ்க்கை வாழ்ந்தமையே அவரது நினைவு நீடிப்பதற்கு காரணமாகும். அவர்கள் ஆரம்பக்கல்வியை இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றவராவார். கல்வி கற்றுவரும் போது இயக்கச்சிப் பகுதியில் பிரபல விசக்கடி வைத்தியராக விளங்கிய பேரனார் சின்னப்பு உடையாரின் அனுசரனையும் அமரருக்கு விசக்கடிமேல் இருந்த அக்கறையும் விசக்கடியை பேரனாரிடம் கற்றுக்கொண்டார். இதனால் பேரனாருக்கு உறுதுணையாகவும் அவரின்பின் தானாகவும் விசக்கடி வைத்தியத்தைச் செய்துவந்தார். ஒரு பரம்பரை வைத்தியத்தை செயலிழக்கச்செய்யாது வளர்த்து வந்த பெருமைக்குறியவராய் விளங்கியதுடன் 1992ம் ஆண்டில் இயக்கச்சியில் இருந்து வட்டக்கச்சிக்கு இடம்பெயரும் வரை இத்தொழிலைச் செய்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கச்சியில் அ.த.க பாடசாலையில் அதிபராக நான் இருந்த காலத்தில்( 1984ம் - 1989) என்னோடு அமரரும் அவரது குடும்பத்தவரும் மிக நெருக்கமாகப் பழகியவர்கள்.அத்துடன் அமரரது பிள்ளைகளும் என்னிடம் படித்ததால் எமது உறவு நெருக்கமாக இருந்தது. அமரர் தன்னோடு சேர்ந்தவர்களுக்கு உறவினர்களுக்கும் உதவி செய்வதிலும் எப்போதும் நாட்டமுடையவாக விளங்கினார். தனது ஒன்பது பிள்ளைகளோடு இருந்த பற்றுப் பாசங்களோடும் பெறாமக்களுக்கும் உதவுவதிலும் அக்கறை உடையவாக உயர்ந்த இலட்சியமாக உடையவர் அமரராவார்.

தனது கடவுள்பக்தி நேர்மையான வாழ்வுகளால் இறைவன் ஒன்பது பிள்ளைகளைக் கொடுத்தார். இன்று அவர்களது வாழ்வும் பண்புகளும் யார் மத்தியிலும் அமரரை நினைவுகூற வைத்த வண்ணம் உள்ளது. சிறப்பான ஒரு விவசாயியாக இயக்கச்சிப் பிரதேசத்தில் விளங்கியதுடன் அவ்விவசாயத்தின் மூலமே தனது பிள்ளைகளின் படிப்பை மேற்கொண்டதுடன் அவர்களது வாழ்க்கையையும் உயர்வடைய வைத்தது. இவ்வகையில் அவரது மூன்று பெண்பிள்ளைகள் ஆசிரியராக பணிபுரிபவர்களாகவும் இளைப்பாறியவர்களாகவும் உள்ளனர்.

மூத்தமகள் ஜேர்மனியிலும் ஏனைய ஐவர் கனடா நாட்டிலும் வாழ்ந்து வருகின்றனர். பிள்ளைகளின் பிள்ளைகள் பொறியியலாளர்களாகவும், வைத்தியத்துறையில் படிப்பவர்களாகவும் உள்ளனர். இத்தகைய பேரப்பிள்ளைகளைகளையும் பெற்றெடுத்த பெருமையைப் பேசாதார் எவருமில்லை எனலாம்.

அமரரோடு பழகியவர்களுக்கு நன்கு தெரிந்த விடயம் அவருக்கு வெளிநாடு செல்லும் எண்ணம் எதுவும் இருக்கவில்லை. ஆனால் தனது இறுதிமகள் கிரியாவை ஸ்பொன்சர் செய்து கனடாவிற்கு அழைத்துச் செல்லவேண்டிய ஒரு பொறுப்பு அமரருக்கு ஏற்பட்டதால் அவருடன் கனடாவிற்குச் சென்று தனது இறுதிமகன் நகுலேஸ்வரனுடனும் தனது இறுதிக்காலத்தில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் மனைவியும் கனடா செல்லும்போதும் எனது இல்லத்திற்கு (வட்டக்கச்சி) வந்து தாம் கனடா செல்ல வேண்டிய தேவை குறித்து கலந்துரையாடிச் சென்றதும் இன்றும் பசுமரத்தாணி போல் நினைவிலுள்ளது. அமரர் என்றும் ஆழ்ந்த கடவுள் பக்தியுடையவர். இயக்கச்சியிலுள்ள அம்மன் கோயிலை வழிபட்டு வந்ததடன் அதனை பராமரிக்க வேண்டியதை என்றும் நினைவில் வைத்திருந்தவர். தனது இறுதிக்காலத்தில் மகள் காந்தருபி ஊடாக அம்மன் கோயில் பற்றி சிந்தித்து அங்கு ஓர் நாகதம்பிரான் ஆலயம் அமைக்க வேண்டியதை வலியுறுத்தி அதற்கான நிதியை அனுப்பிக் கொண்டிருக்கும் போது காலமாகிவிட்டார். ஆனால் அப்பணி மகள் காந்தருபி ஊடாக மேற்கொள்ளப்படுவது மிகவும் மகிழ்ச்சியானது. அமரரது ஓரவருட பூர்த்தியின் போது நாகதம்பிரான் அவருக்கான ஆத்மசாந்தியை வழங்குவார் என்பது திடமானது.

அமரரது பிறப்பு, வாழ்வு, வாழ்வில் அவர்செய்த உதவிகள் அதனால் அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எமது நாட்டிலும் ஜேர்மனி, கனடா நாடுகளிலும் வாழும் வாழ்க்கைகள் யாவும் என்றும் பெருமை சேர்க்கும் விடயங்களாக உள்ளன. அமரரோடும் அவரது மனைவியோடும் பழகினோம் எனும்போது எமக்கம் பெருமையாக உள்ளது. எப்போதும் அவர்களது வாழ்க்கை மற்றைய அனைவரக்கும் முன்னுதாரங்களாக விளங்குகின்றது. அமரரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம். நல்வழிகாட்டி நலமேவாழ வழிசெய்த அமரரது பிள்ளைகளது வாழ்வும் என்றும் ஒளிவீச இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

*ப. அரியரத்தினம்*
*ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர்*
*கிளிநொச்சி முல்லைத்தீவு*
*மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வடமாகாணம்*

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நின்றுவிட்ட கந்தையா அண்ணர்

"தோன்றில் புகழோடு தோன்றுக அ∴திலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவரின் திருக்குறள் இனிய உரைக்கமைய இப்பூவுலகில் பெறுதற்கரிய பேறாகிய மானிடப்பிறவியெடுத்து இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்துமற்றையவர்களையும் வாழ வழிகாட்டியாக இருந்து பிறப்பின் பளன்களை அனுபவித்து நல்ல வாரிசுகளை பெற்று தனது 91ம் வயதில் அமரத்துவம் அடைந்த பெருந்தகைதான் அருணாசலம் கந்தையா அண்ணர்.

இவரது பூர்வீகம் தலைமுறை தலைமுறையாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வான்பயிர்களான பனை, தென்னை மற்றம் பச்சைப்பசேலென்ற மூலிகைத்தாவரங்களும் காடும் புதரும் நிறைந்தும் நல் உணவுத்தானியங்களை நஞ்சுக்கலப்பின்றி அள்ளித்தரும் இயக்கச்சி என்ற தனி ஊர். சுனச்செறிவு குறைந்த வாழ்விடம். வனஜீவராசிகள், கால்நடைகள், விசயந்துக்கள் எல்லாம் தங்குகடையின்றி பரவலாகக் காணப்படும். மனித வாழ்விற்கு ஏற்ற நல்ல சுவாத்தியம் குறிஞ்சாத்தீவிலும் ஆனையிறவிலும் கிளாளிக் கரையிலும் இருந்து உவர் கலந்த காற்று எப்பொதும் வீசும்.

இவ்வூரில் இவரது தாய்வழிப் பாட்டனார் சின்னப்பு உடையார். இவர் ஒரு சித்தவைத்தியர் விசக்கடி வைத்தியரும் கூட. இவர் பரம்பரையில் வந்த கந்தையா அண்ணரும் ஒரு சித்தவைத்தியர் விசக்கடி வைத்தியர் சோதிடக்கலையையும் அறிந்திருந்தார். சிறுவயதில் தந்தை அருணாசலத்தையும் தாயார் பார்வதிப்பிள்ளையையும் இழந்துவிட்டார். சிறியதாயின் அரவணைப்பிலேயே இவரும் சகோதரர்களும் வாழ்ந்தனர். கல்வி கற்பதற்கு தொலைதூரம் நடந்த சென்று கற்றனர். விவசாயத்தையே பிரதானத்தொழிலாகக் கொண்டவர். பெரியோர் நிச்சயித்தப்படி உறவுமுறை சின்னத்தங்கத்தை கரம்பற்றி மூன்று ஆண்களையும் ஆறு பெண்பிள்ளைகளையும் வாரிசாகப் பெற்றார். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்திலும் கல்விவிடயத்திலும் அதிக கரிசனை கொண்டு விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சற்ற மூலிகை குறிஞ்சா, முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை, கொவ்வை போன்ற இலைவகைகளையும் நஞ்சற்ற மரக்கறி நெல் அரிசி ஆகியன பிரதான உணவுகளாகக் கொண்டார். இவ்வுணவு வகைகளுக்கு கந்தையா அண்ணர் அன்றே முக்கியத்துவம் கொடுத்துவிட்டார். போக்குவரத்து வசதிகள் குறைந்த அக்காலத்தில் பிள்ளைகளை பஸ்சில் அனுப்பி பளை மத்திய கல்லூரியில் கற்க வைத்ததுடன் உயர்ச்சியிலும் பங்கெடுத்தார். அவர்களை உயர்கல்வி கற்கவைத்து பட்டங்கள் பெறச்செய்தார்.

பிள்ளைகளை அவை தனில் முன்னிருக்கச்செய்ய அவர் பாடுபட்டு அதில் நிறைவான பயன்களைப் பிள்ளைகள் மூலமும் பேரப்பிள்ளைகள் மூலமும் கண்டு பெருமிதம் அடைந்தார். இவரின் நான்கு பெண்பிள்ளைகள் குருத்தொழில் செய்தும் ஓய்வு பெற்றவர்களாகவும் கற்பித்துக் கொண்டும் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர் எச்சந்தர்ப்பத்திலும் சித்தமருத்தவத்தையும் விசக்கடி வைத்தியத்தையும் கைவிடவில்லை. வைத்தியத்திற்குப் பணம் பெற்றால் அது சித்திக்காது என்ற தாராள மனப்பாங்கு கொண்டவர்.

நாட்டில் யுத்தம் ஆனையிறவுமுகாம், செல்வீச்சு, எறிகணை வீச்சு, விமானத்தாக்குதல் ஆகியவற்றிற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை வடக்கேயும் செல்ல முடியாது, தெற்கேயும் செல்ல முடியாத அவலநிலை. சொத்துச்சுகங்களை இழந்த குடும்பத்துடனும் உறவுகளுடனும் கிழக்குத்திசையாக கொம்படி வழிமூலம் தனது பூர்வீக இயக்கச்சியைவிட்டு வந்தாரை வாழவைக்கும் இன்னொரு கச்சியான வட்டக்கச்சிக்கு 1992ல் வந்துசேர்ந்தார்.

தனது துணைவியின் உடன்பிறவாச் சகோதரியான ராசாத்தி சுப்பிரமணியம் (மண்டலாய் மணியண்ணை) அவர்களின் வீட்டிலேயே முதல் தங்கினார். இயக்கச்சியில் தான் வழிபட்ட குல தெய்வங்களை இங்கும் கண்டு பயபக்தியுடன் வழிபட்டுவந்தார். இதனால் அவரக்கு வட்டக்கச்சி ஊரும் பிடித்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையானவர், மெலிந்த தோற்றம், வெண்ணிற ஆடை, காந்தியைப்போல் தோற்றமுடையவர். எனக்கு அறிமுகமானவர். தினம் தினம் சந்திப்போம். சித்த மருத்துவம், உணவுப்பழக்கவழக்கம், தான் தன் பிள்ளைகளை படிப்பிக்கப்பட்ட துன்பம், கல்விதான் இருகண்கள் எனக் குறிப்பிட்டு பிள்ளைகளின் படிப்பைக் கவனியுங்கள் என்று கூறுவார். நாட்டின் நிலைமைகளை தீர்க்கதரிசி போல் கூறுவார். இவரது வாழ்வியலும் பழக்கவழக்கங்களும் முன்னுதாரணமானது.

1997ல் மகளுக்கு கனடா செல்லும் குடியுரிமை அனுமதியினால் மனைவியுடன் கனடா சென்றார். இவரது பிள்ளைகளம் பேரப்பிள்ளைகளும் சுகதேசிகளாக உயர்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஒன்பது பிள்ளைகளுக்கும் நல்மருமக்களை தேடிவைத்துள்ளார். கனடா சென்று மீண்டும் 2018ல் வட்டக்கச்சிக்கு வருகைதந்த போது என்னைத்தேடி வந்தார். அன்று பார்த்த கந்தையா அண்ணனின் தோற்றத்தையே கண்டேன்.

பிதா மாதா செய்யம் பூர்வபுண்ணிய பயன் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் சேரும் என்பர். "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச்செயல்" என்றதற்கமைய தன் பணிகளை மேன்மையுறச் செய்திருந்தார். பெருவிருட்சமான இவரது குடும்பத்தின் முதல் பழம் பழுத்து வித்தாகி விழுந்து விட்டது. அது விதையாக மீண்டும் எமது குடும்பத்தில் சேரும் என்ற நம்பிக்கையில் இவரது இழப்பைத் தாங்கிக்கொள்வோம்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

***"மரணம் வாழ்வின் முடிவல்ல மரணத்தின் பின் வாழ்கின்றவர்தான் உண்மை மனிதன்"***

***சிவக்கொழுந்து புவனேஸ்வரன்***
***சமாதான நீதவான்***
***(பிரதேச சபை உறுப்பினர் கரைச்சி)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அருணாசலம் கந்தையா அவர்களின் சிவப்பதப்பேறு குறித்து அமரர் சின்னத்தங்கச்சி துரையப்பா குடும்பத்தினரின் பிரதாபம்

### *மண்டலாய் பிள்ளையாரை வேண்டிப்பாடியது*

மண்டலாய் மேவும் மறை ஞான தனிமுதலே
மனங்கொண்டால் மனத்துறையும் மாதுமையின் முதல் மகனே
கண்டுன்னைப் பணிபவர்கள் கருமங்கள் முடிப்பவரே
கந்தனுக்கு முதற்பிறந்த கஜமுகத்து திருவடிவே
பண்டுகதிபார் துறந்து பண்பின்சீலன்
பார்புகழும் கந்தையனின் பணிகள் ஓய்ந்து
வண்டுறையும் உன் மலர்த்தாள் வணங்க வேண்டி
வருவான் அடிசேர்த்து வாழ்த்துவாயே.

### *இயக்கச்சி கண்ணகையம்மனை வேண்டிப் பாடியது*

இயக்கச்சியாளும் என் இறைவித்தாயே
இளங்கோவின் நாயகியாய் இங்குவந்து
பலம் சேர்த்தும் பத்தினியாய் பணிந்து போற்ற
பாங்குநிறை கோவில் கொண்ட பரமன்மாதே
நயம்பேச்சு நல்வெண்ணம் நன்மையாளன்
நாடு செறி வாழ்வு இனிவேண்டாம் என்று
தயங்கியவா உன் தாள்கள் தஞ்சம் வேண்டி
தனியாக வருபவனை தாங்குவாயே.

### *மல்வில் கிருஷ்ணன் பெருமானை வேண்டிப் பாடியது*

காத்தல் கடவுளராய் கவின் கோவில் மல்வினிலே
சேர்த்த அருள் நல்கும் செங்கண் மால் மாயவனே
பார்த்த புவி வாழும் பணிபோதும் என்று விட்டு
வேர்த்து வரும் கந்தையன் விரை மலர்த்தாள் வைப்பாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் துரையப்பா சின்னத்தங்கச்சி (குடும்பம்)
## பிரதாபம்

உடன் பிறவாச் சகோதரனே உற்ற துணையானவனே
திடங்கொண்ட சிந்தையனே பேர்சித்த வைத்தியனே
படம்தாங்கு பார் வாழ்வு போதும் என்று பணி ஓய்ந்து
நடம்புரியும் நாதன்தாள் கண்ணும் உன்னை நாடுவமே
எங்கள் திருவிளக்கே இணையில்லா திருவோனே
பங்கங்கள் தீர்த்தருளும் பார் புகழும் பண்பானே
உங்கள் பிரிவால் உறும் துயரம் கொண்ட ஏற்றும்
தங்கத்தனையரின் தறங்கு கண்ணீர் தானமதே.

## "உன் நினைவால் என்றும் நாமே"

இல்லற வாழ்க்கையை
இனிதாக வாழ்ந்தோம்
வாழ்வின் சுமைளை
சுமைத்தாங்கியாகத் தாங்கினாய்
உன் உறவுகள் அழைத்ததால்
சொர்க்கம் ஆனந்தம் என்று
நீ விண்ணுலகம் சென்றாலும்
நின் நினைவுப் பெருங்கடலில்
கரைசேர முடியாமல் தவிக்கின்றேன்
இந்தப்பேதை ஐயா

*மனைவி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த பிள்ளைகள் போல்
எம்மை உன் பிள்ளைகள் போல் நேசித்தாய்
உன் விருந்தோம்பலும் அன்பான வரவேற்பும்
எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது ஐயா
உன் பொன்மொழிகள் எமக்கு
என்றும் தெய்வவாக்கு ஐயா
கடலை நதி சங்கமிப்பது போல்
எங்கள் மீது அன்புவைத்தாயே
நீ நீர்க்கவில்லை உங்கள்
நினைவோடு நாம் வாழ்கின்றோம்.

*மருமக்கள்*

## பிள்ளைகளின் ஏக்கம்

வண்ணமலரில் பூத்தவரே!
அன்பின் அமுதாய வளர்ந்தவரே!
அன்னை தந்தை பாசத்தோடு
பார் புகழ வளர்ந்தாயே!

தாய் தந்தை அரவணைப்பை
சிறுவயதில் இழந்தாயே
பாட்டனார் சிற்றன்னை
வளர்ப்பில் வளர்ந்தாயே

அன்பு உடன் பிறப்புக்களின்
அன்புத்தந்தையாய்
வாழ்ந்தாயே! பாசம்
வைத்த மங்கையை
மணர்ந்தாயே
அன்போடு பிள்ளைகளை
வளர்த்தாயே

சந்தனக்கட்டை தேய்வது போல்
எமக்காகத் தேய்ந்தாயே1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது சித்த மருத்துவத்தால்
மக்களுக்கு நோய் நொடி
தீர்த்தாயே!
இலைகளில் இருந்து கசியும்
நீராய் ஐயாவுன் நினைவுகள்
தோன்றுதே! அந்திமாலையில்
நிலாவின்பின் தோன்றும்
தாரகையில் எம் தந்தையைக்
காண்கின்றோம்! இதுதான்
இறுதிப் பொருள்
நிதர்சனம்!! என நினைத்தோம்!!!

**மகள் த.ரஞ்சி**

## "எங்கள் குலகுருவே"

எமது பாசமிகு அப்பப்பா, அன்புத் தாத்தா சிவபதம் அடைந்ததையிட்டு நாமும் கண்கலங்கித் துன்பத்தில் ஆழ்ந்தோம். அவர் புகட்டிய அன்பு மொழிகளும் அரவணைப்பும் என்றும் எம் நெஞ்சத்தை விட்டகலாத நினைவுகள் தாம். அவர் ஒரு சாதாரண மனிதராக மட்டுமன்றி சமூக மனப்பாங்குடன் பரம்பரை வைத்தியராக ஆற்றிய பணிகள் சமூகத்தில் பெருமதிப்பு மிக்க ஒருவராக விளங்கியுள்ளார். என்பதைஆவரின் இறப்புச் செய்தி அறிந்து பலராலும் பகிரப்பட்ட விடயங்கள் எம்மை வியப்பில் ஆழ்த்தி மகிழ்வடைய வைத்தது.

அவர் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை அடிக்கடி கதைகள் மூலம் சொல்லிவருவார். அவரின் கொள்கைகள் எதிர்நோக்கிய சவால்கள் யாருக்கும் தீங்கினை மனதில் கூட நினைக்காத பண்பு பிரச்சினைகளை அமைதியாக மெதுவாக கையாண்ட விதங்கள் பற்றிக் கூறியமை இன்றும் என்றும் எமக்கு ஆலோசனைகளாகவும் வழிகாட்டியாகவும் அமையும். வாழ்வின் உண்மைகள் சிலவற்றை எமக்குக் கூறியபோதும் அவர் கூறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுரைகள் காலத்திற்குப் பொருத்தமானவை அல்ல என்று நினைப்பதும் காலப்போக்கில் அதன் உள்ளார்ந்த கருத்தை அறிந்து அவர் பேச்சைக் கேட்கவில்லையே என மனவருத்தப்பட்டதும் உண்டு.

முதுமைக் காலத்தில் கூட பாரபட்சம் இன்றி எல்லாப் பேரப்பிள்ளைகளையும் அன்பாக அழைத்து எதிர்காலத்தில் நன்றாக வாழவேண்டும் என வாழ்த்தவார். "பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழ்க" என பல தடவை கூறி எமை வாழ்த்துவார். அவர் எம்மீது கொண்ட தீர்க்கதரிசனங்களை செயல் வடிவமாக்கும் செயல்வீரராக நாம் வாழ என்றும் அவர் ஆசிகளை வேண்டி நிற்கின்றோம். ஆண்டவனே எமக்கும் அருள் செய்வாய் உன் பாதம் பணிகின்றோம்.

***த. விதுஜன்***
***த. சங்கவி***

## "தந்தையின் உடன்பிறப்பே"

பெற்றெடுத்த பிள்ளைகள் போன்றே
பெரிய பாசம் கொண்டவரெ
பெற்ற பிள்ளைகள் போன்றே
பெரியப்பா மீது பாசமுற்றோமே!
பெற்ற பந்தம் விட்டே
பூவுலகம் விட்டதும் ஏனோ?
பெற்ற பாசத்தால் தினமும்
பெறாமக்கள் நாமும் அழுகின்றோம்.

நல்ல உள்ளம் தனையே
நாளுங்கொண்ட நல்லவரே
நல்ல நானிலம் விட்டே
நண்ணியது ஏனோ விண்ணுலகை!
நல்ல சொந்தம் தனையே
நாமும் இழந்துவிட்டோம்.
நல்ல சோகம் உற்றே
நாமும் அழுகின்றோம்

***(திருமதி வேலுப்பிள்ளை முத்துலட்சுமி பிள்ளைகள்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புக்கடி தொடர்பான விடயங்கள்

## பாம்பு தீண்டியபின் செய்ய வேண்டிய முதலுதவி

01. பாம்பு தீண்டியபின் தேவையற்ற பயம் எம்மிடையே ஏற்படும். ஆனால் பெரும்பாலான பாம்புகள் விஷமற்றவை விசப்பாம்புகளாலும் புகுத்தப்படும் விஷத்தின் அளவு மிகச் சிறிதாகும். மேலும் இலங்கையில் உள்ள விஷப்பாம்புகளுக்கு எதிரான மருத்துவச் சிகிச்சை உண்டு. ஆகவே தேவையற்ற பீதியடையத்தேவையில்லை.

02. பாம்பு கடித்த இடத்தை சோப் மற்றும் தண்ணீரால் கழுவ வேண்டும் அல்லது அவ்விடத்தை சுத்தமான துணியால் துடைக்க வேண்டும்.இச்செயற்பாட்டின் மூலம் பாம்பின் விஷத்தை காயமேற்பரப்பில் இருந்து அகற்ற வேண்டும்.

03. பொதுவாக பாம்பு கடித்த இடம் வீங்கும் என்பதால் அவ்விடத்தில் உள்ள அணிகலன்களை அகற்ற வேண்டும். (காப்பு, கயிறு, மோதிரம், காற்சங்கிலி)

04. கடித்த இடத்தை அசைக்காத வகையில் வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் காயம் கடித்த இடத்தில் இருந்து விஷம் உடல் முழுவதும் பரவுவதை தடுக்க முடியும் மற்றும் வலியைக் குறைக்க முடியும்.

05. வலியைக் குறைக்க பரசிற்றமோல்.·. பனடோல் போன்ற வலி நிவாரணியை பாவிக்க முடியும்.

06. மிக விரைவாக வைத்தியசாலைக்கு பாம்பு கடித்தவரை அனுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு கடித்தவுடன் செய்யக்கூடாதவை

01. மதுபான வகைகள் அருந்தக்கூடாது. மதுபானம் விஷத்தின் அகத்துறிஞ்சலை அதிகரிக்கும்.
02. அஸ்பிரின் மருந்துவகைகள் விசம் காரணமாக ஏற்படும் இரத்தப்போக்கை அதிகரிக்கும்.
03. விசத்தை கடித்த இடத்தலிருந்து உறிஞ்சி எடுத்தல் நன்மையை விட தீமையை மேதிகமாகத்தரும்.
04. பாம்பு கடித்த இடத்திற்கு மேலாக கயிறு கட்டுதல் போன்ற செயற்பாடுகள் செய்யக்கூடாது.
05. வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லாது இருக்கக்கூடாது.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்

01. பெரும்பாலும் கால்களில் பாம்புகள் கடிக்கின்றன. சப்பாத்து, நீண்ட ஜீன்ஸ், சாரம் போன்ற கால்களை மூடிய பாதுகாப்பு அணிகலன்கள் பாம்புகள் இருக்கக்கூடிய புல்வெளிகள், காட்டுப்பாதைகள் மற்றும் விவசாய நிலங்களில் நடந்து செல்லும்போது பாதணிகள் அணிதல் பாதுகாப்பானதாகும்.
02. இரவில் பாம்புகள் இருக்கக்கூடிய இடங்களினூடாகச் செல்லும் போது விளக்கு மற்றும் தடியை கொண்டு செல்ல வேண்டும். நிலத்தில் தட்டி தட்டி நடக்கவேண்டும்.பாம்புகள் அதிர்வுகளை உணரக்கூடியன என்பதால் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றுவிடும்.
03. எலி, பாம்புகள், தவளைகள் வரக்கூடிய குழாய்த்தொகுதிகளை வலைகளால் அடைக்க வேண்டும்.
04. வீட்டிற்கு அருகில் உள்ள எறும்புப் புற்றுக்களை அழித்து பாம்புகள் புற்றுக்குள் வாழாது தடுத்தல் வேண்டும்.
05. புற்றுக்கள் மற்றும் மரப்பொந்துகளுக்குள் கைகளைக் கவனமின்றி உட்புகுத்தக்கூடாது. ஏனெனில் அங்கு பாம்புகள் வாழக்கூடும்.

*(தொகுப்பு த. மதுரா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்களைப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

1. மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுன்னைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

2. கனைத்தெழுந்த வெண்டிரை சூழ் கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனை யாமிடற்றில் வைத்த திருந்திய தேவ நின்னை
மனத் தகத்தொர் பாடலால் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

3. நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்ருத
என்னடியா னுயிரை வவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

4. மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கை தங்குமவிர் சடையாருரா
தலைபுரிந்த பலிசேர் மகிழ்வாய் தலைவ நின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்த தாரிடர் களையாய் நெடுங்களம் மேயவனே

5. பாங்கின் நல்லார் படிமஞ் செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா வன்பினோடுந் தலைவநின்றாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடை மேற்கரந்தாய்
அருந்தனாய ஆதி தேவனடி யிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர் களையாய் நெடுங்களம் மேயவனே

7. கூறுகொண்டாய் மூன்று மொன்றாக கூட்டியோர் வெங்கணையால்
மாறு கொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீ தென்றெம் பெருமானணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

8. குன்றினுச்சிமேல் விளங்கும் கொடிமதில் சூழிலங்கை
அன்றி நின்ற வரக்கர் கோனை யருவரைக் கீழடர்த்தாய்
என்று நல்லவாய் மொழியாலே த்தியிராப் பகலும்
நின்று நைவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே

9. வேழவெண் கொம்பொசித்த மாலும் விளங்கிய நான்முகனும்
சூழவெங்கும் தேடவாங்கோர் சோதியாகி நின்றாய்
கேழல் வெண் கொம்பணிந்த பெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல் வாழ்வாரிடர் களையாய் நெடுங்களம் மேயவனே

10. வெஞ்சொல்தஞ் சொல்லாக்கி நின்ற வேடமில்லாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியரும் தத்துவ மொன்றறியார்
துஞ்சலில்லாவாய் மொழியாற்றோத்திர நின்னடியே
நெஞ்சில் வைப்பாரிடர் களையாய் நெடுங்களம் மேயவனே

11. நீடவல்லார் சடையான் மேய நெடுங் களத்தைச்
சேடர் வாழுமாமறுகிற்சிர புரக் கோனலத்தால்
நாடவல்லபனுவன் மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் மறையுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருவாசகச் சிறப்பு

**தொல்லை யிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் திருவாதவூர் எங்கோன்**
**திருவாசகம் என்னுந் தேன்.**

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கொடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைந்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யாஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட முடிய மாய விருளை
அறம்பாவமென்னும் அருங்காயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே னோ ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லாயுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளிய
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவோம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தயுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டிய பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

*திருச்சிற்றம்பலம்*

சீதக்கபளச் செந்தாமரையும்
பாதச்சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
ஐந்து கரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவா
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந் தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேம் புகட்டியென் செவியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்குமுபாயம்
இன்புறு கருணை இனிதெனக்கருளி
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந்தந் தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மத்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரதது அங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையில் இழு முனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான் றெழுபாம்பின் நாவிலுணர்த்தி
குண்டலியதனிற் கூடிய அசவை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அழுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்து
இருவெளியிரண்டும் கொன்றிட மென்ன
அருள்தரும் அனைத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணு விற்கணு வாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயகர் விரைகழல் சரணே

முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ கிருஷ்ண கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் பரமாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே!

ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் உலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம!
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே

தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளையாவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக்கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம்! கவசம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன பணியும் பாதம் காக்க
பாஞ்சஜன்யம் பக்தனை காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க

கேலிப் பொருளை கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக! துணையே தருக!
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக!
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடும் துன்பம் தறிகெட ஓட

திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக!
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக
நிஷ்காமத்தில் நிறைவோன் வருக
கர்மசந் யாசக் களமே வருக!
ஞானம் யோகம் நல்குவன் வருக!
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்!
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்!
மதுசூதனனே மனிதன் சரணம் சரணம்!
இருடீ கேச இயலான் சரணம்!

கீதா சாரிய கிருஷ்ணா சரணம்!
வேதா சாரிய வேந்தே சரணம்!
தேவகி மைந்தா சிறியேன் சரணம்!
யசோதா குமரா அடியேன் சரணம்!
உன்னை விட்டொரு உறவுகளில்லை
என்னை விட்டொருஇனியவனில்லை
நம்மை விட்டொரு நண்பர்களில்லை

எங்கெங்கே நான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள் செய வருக!
கோசலை ஈன்ற குமரா வருக!
கோதையின் மாலை கொண்டவன் வருக!
ரகுவம் சத்தின் நாயகன் வருக!
யதுவம் சத்தின் யாதவன் வருக!
மதுவை வென்ற மாதவன் வருக!
மலைக்குடி கொண்ட மாலவன் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பதி யாளும் திருமால் வருக!

திருவரங் கத்துப் பெருமாள் வருக!

இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்

இராவணன் எமக்கும் இன்னருள் புரிக!

கம்சன் கொடுமை களைந்தோய் வருக!

காலனை வெல்லக் கைவலி தருக!

நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்

காதில் குண்டலம் கையில் வில்லொடு

தண்டைக் காலில் சலங்கை குலுங்க

அண்டையில் வந்து அருளே புரிக!

கௌரவர் தம்மை களத்தில் வென்றாய்

கௌரவம் காக்க கண்ணா வருக!

பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்

படித்தவன் மகிழப் பரமே வரக!

மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய

சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்!

சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்

பக்கென உந்தன் பாதம் பற்றினேன்

கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்

அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்

இக்கணம் என்னை ஏங்க விடாமல்

தக்கவனே நீ தயவுடன் அருள்க!

கல்லாய்ப் போனவள் காலடி பட்டு

பெண்ணாய் ஆனது பிழையே யன்று!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னால் தானே உலகம் இயக்கம்!
கண்ணனி லாமல் கடல்வான் ஏது?
கண்ணனி லாமல் கடவுளுமில்லை
கண்ணனி லாமல் கவிதையுமில்லை
கண்ணனி லாமல் காலமுமில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை!
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்

சத்திய நாதன் தான்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிகளில்லை நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு!
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க

பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியுமில்லாமல்
தொற்றும் நோய்கள் பற்றி விடாமல்
முதுமைத் துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்
சிந்தனை கெட்டு திறமையும் கெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றிளமை வழங்கு!
இப்பணி தொடர அற்புதம் காட்டு!
தளரா மேனியில் சக்தியைக்கூட்டு
தாய்போலருந்து சாதம் ஊட்டு!
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு!

உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு!
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியென தலையை யசைக்க
பொலி பொலி பொலியெனப் புகழும்விளங்க
மளமள மளமளவென மனையருள் நீங்க
கலகல கலகலவென காசுகள் சேர
தளதள தளதளவென தர்மம் தழைக்க

வரவர வரவர வாய்ப்புக்கள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்!
அடியேன் வாழ்வில் நீயே கவசம்!
கவசம் கவசம் கவசம் கவசம்!
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்!
கவசம் கவசம் கவசம் கவசம்!
வாழ்க்கை என்னும் கோபுரக் கலசம்!

அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்!
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்

ஜெய ஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா...
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ மணிமாலை - முருகன் பாடல்கள் (ஐயா மாலையில் நேரத்தில் கடவுளை வணங்கும்போது பாடிய திருப்பாடல்கள்)

01. நீர் உண்டு பொழிகின்ற கார் உண்டு விளைகின்ற
நிலன் உண்டு பலனும் உண்டு
நிதி உண்டு துதி உண்டு மதி உண்டு கது கொண்ட
நெறி உண்டு நிலையும் உண்டு
ஊர் உண்டு பேர் உண்டு மணி உண்டு பணி உண்டு
உடை உண்டு கொடையும் உண்டு
உண்டு உண்டு மகிழவே உணவு உண்டு சாந்தம் உறும்
உளம் உண்டு வளமும் உண்டு
தேர் உண்டு கரி உண்டு பரி உண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன் உண்டு வண்டுறு கடம் பணியும் நின் பதத்
தியானம் உண்டாகில் அரசே
தார் உண்ட சென்னையில் கந்தக்கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத்துய்ய உன்முகம் சைவமணி
சண்முகத்தெய்வ மணியே

02. உளம் எனது வசம் நின்ற தில்லை என் தொல்லைவினை
ஒல்லை விட்டிடவும் இல்லை
உன்பதத்தன்பில்லை என்றனக்குற்ற துணை
உனையன்றி வேறில்லை
இளையன் அவனுக்கருள வேண்டும் என்றுன்பால்
இசைக்கின்ற பேரும் இல்லை
ஏழை அவனுக்கருள்வதேன் என்றுன் எதிர்நின்
றியம்புகின்றோரும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம் மருவும் உனது திருவருள் குறைவதில்லை மேல்
மற்றொரு வழக்கும் இல்லை
வந்திரப்பேர்களுக்கு கிலை என்பதில்லை நீ
வன்மனத்தவனும் இல்லை
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி
சண்முகத்தெய்வமணியே

03. ஏகமே ஆனந்த போகமே யோகமே
என் பெருஞ் செல்வமே நன்
முத்திக்க முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவிலாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமை மகனே
பக்திக்க வந்தவருள் பரிந்தருளும் நின்அடிப்
பற்றருளி என்னை இந்த
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனாய்
பண்ணமால் ஆண்டருளுவாய்
சக்திக்கும் நீர்ச்சென்னை கந்தக்கோட்டத்துள்ளவாளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத்துய்யமணி உன்முகம் சைவமணி
சண்முகத் தெய்வமணியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

## கணபதி காப்பு

தாரமர் கொன்றையையும் சண்பகமாலையையும் சாத்ததும் தில்லை
ஊரார் தம் பாகத்து உமைமைந்தனே! உலகு ஏழும் பெற்ற
சீர் அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்க கட்டுரையே.

### 1. ஞானமும் நல்வித்தையும் பெற

உதிர்க்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்குடிக்குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழித்துணையே.

### 2. பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழும் தெய்வமும், பெற்றதாயும் சுருதிகளின்
பணையும், கொழுந்தும் பதி கொண்டவேரும் பனிமலர்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங்குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே.

### 3. குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறந்தேன் நின்அன்பர் பெருமை எண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

### 4. உயர் பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை! செப்புரை செய்யும் புணர்முனையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

### 6. மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம் சிந்துரவ வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன் தன் பரமாகம பத்ததியே

### 7. மலையென வரும் துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என்ஆவி தளர்விலதோர்
கதியுறும் வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வெணி மகிழ்நனும், மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானை சுந்தரியே.

### 8. பற்றுக்கள் நீங்கி பக்தி பெருகிட

சுந்தரி! எந்தை துணைவி! என் பாசத்தொடரை எல்லாம்
வந்தரி சிந்துரவ வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகைக் ஆரணத்தோன்
சுந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

### 9. அனைத்தும் வசமாக

கருத்தன, எந்தை தன் கண்ணன், வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும், செங்கைச்சிலையும், அம்பும்
முருத்தனமூரலும், நீயும்இ அம்மே! வந்துஎன் முன் நிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10. மோட்ச சாதனம் பெற

நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமரையின்
ஒன்றும் அரும் பொருளே! அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே!

### 11. இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான் அந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானம் தம் ஆடங்கம் எம்பிரான் முடிக்கண்ணியே.

### 12. தியானத்தில் நிலைபெற

கண்ணியது உன்புகழ் கற்பது என் நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இருபதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியது ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே

### 13. வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
முத்தவளே உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே!

### 14. தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர், தானவர், ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் விசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண் ஒளியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 15. பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்றுமுன்னே பலகோடிதவங்கள் செய்வார்
மண்ணளிக்கம் செல்வமோ பெறுவார்? மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ?
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.

### 16. முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து, கிளர்ந்து, ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே.

### 17. கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள், அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி, துணைஇரதி
பதிசயமானது அபசயம் ஆக முன் பார்த்தவர் தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

### 18. மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும், நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல்வரும் போது வெளிநிற்கவே.

### 19. பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின் திருமேனியைப்பார்த்தேன் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ?
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. வீடுவாசல் முதலிய செல்வங்கள் உண்டாக**

உறைகின்ற நின் திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ?
அறைகின்ற நான்மறையின் அடியோ? முடியோ? அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சமோ? எந்தன் நெஞ்சமோ?
மறைகின்ற வாரிதியோ? பூரணாசல மங்கலையே.

**21. அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய**

மங்கலை! சேங்கலசம் முலையாள்! மலையாள்! வருணச்
சங்கலை செங்கை! சுகலகலாமயில்! தாவுங்கை
பொங்கு அலைதங்கும் புரிசடையோன் புடையாள்! உடையாள்!
பிங்கலை! நீலி! செய்யாள்! வெளியாள்! பசும் பொற்கொடியே.

**22. இனிப் பிறவா நெறி அடைய**

கொடியே! இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! புனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்தாண்டுகொள்ளே.

**23. எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க**

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது என்பர் கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே, அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே அளிய என் கண்மணியே.

**24. நோய்கள் விலக**

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கு அழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. நினைத்த காரியம் நிறைவேற

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே! இனி உன்னையான் மறவாமல் நின்று ஏத்துவனே.

## 26. சொல்வாக்கும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும், அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும்குழல் அணங்கே! மணம் நாறும் நின்தாள் இணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடத்தே.

## 27. மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருள்புனலால்
துடைத்தனை சுந்தரி! நின்னருள் ஏதென்று சொல்லுவதே.

## 28. இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் உன நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

## 29. எல்லா சித்திகளும் அடைய

சித்தியும், சித்திதரும் தெய்வமுமாகத் திகழும்
பராசக்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 30. அடுத்தடுத்து வரும் துன்பங்கள் நீங்க

அன்றே தடுத்து! என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும்இ நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே! பல உருவே! அருமே! என் உமையவளே!

### 31. மறுமையில் இன்பம் உண்டாக

உமையும், உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்ய எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே.

### 32. துர்மரணம் வராமலிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லல்பட இருந்தேனை நின் பாதம் என்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர்பாகத்து நேரிழைய!

### 33. இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவழியே ஆடம் காலன் எனைநடுங்க
ஆழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமலைக் கோமளையே!
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

### 34. சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வான்உலகம்
தந்தே பரிவோடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அல்கதிர் ஞாயிறும் திங்களுமே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 35. திருமணம் நிறைவேற

திங்கள் பசுவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கண் பணியணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

### 36. பழைய வினைகள் வலிமை பெற

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில் வரும் தெருளே என் மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே!

### 37. நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும்இ எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

### 38. வேண்டியதை வேண்டியவாறு அடைய

புவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்
ஆவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

### 39. கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 40. பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியைஇ விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணன்றோ முன்செய் புண்ணியமே.

### 41. நல்லடியார் நட்புப் பெற

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

### 42. உலகினை வசப்படுத்த

இடம்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி முத்து
வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

### 43. தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

### 44. பிரிவுணர்ச்சி அகல

தவளே1 இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்
அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 45. உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது, துணிந்துஇச்சையே
பண்டு செய்தார் உளரோ? இலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ? அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் அவறுக்கை அன்றே.

### 46. நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினம் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சைஉண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்துபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும்இ யான் உன்னை
வாழ்த்துவேனே!

### 47. யோகநிலை அடைய

வாழும்படி ஒன்று கண்டு கொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று விள்ளும் படி அன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

### 48. உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதிந்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

### 49. மரணத் துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 50. அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கை நளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

### 51. மோகம் நீங்க

ஆரணம் பொருள் என்றருள் ஒன்றில்லாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
முரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

### 52. பெருஞ்செல்வம் அடைய

வையம், துரக், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

### 53. பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும் பிச்சிமொய்த்து
கன்னங்கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்கனி இருப்பார்க்கு இது போலும் தவமில்லையே.

### 54. கடன் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல்இ நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55. மோன நிலை எய்த**

மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே.

**56. யாவரையும் வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக**

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலம் எங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்தன்நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புகின்றவர் இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

**57. வறுமை ஒழிய**

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப்பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே.

**58. மனஅமைதி பெற**

அருணாம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயத்தும் முலைத்தையல் நல்லாள் தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லாற் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

**59. பிள்ளைகள் நல்லவர்களாக வளர**

தஞ்சம் பிறதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒன்றை நீள்சிலையும்
அஞ்சும் அம்பும் மிக்கலராக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 60. மெய்யுணர்வு பெற

பாலினும் சொல் இனியாய்! புனி மாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால்நன்றோ அடியேன் முடைநாய்த்தலையே?

### 61. மாயையை வெல்ல

நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்?
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே.

### 62. எத்தகைய அச்சமும் அகல

தங்கச்சிலை கொண்டு தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிபுரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி! கோகனகச்
செங்கைக் கரும்பும், அலரும் எப்போதும் என் சிந்தையதே.

### 63. அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும்பொருள் குன்றில்கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

### 64. பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனி பிரசகாசமின்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 65. ஆண்மகப்பேறு அடைய

ககனமும், வானமும், புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயது அன்றோ? வல்லி நீ செய்த வல்லபமே.

### 66. கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன்தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே.

### 67. பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து, தொழுது, மின்போலும் நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனதில் வையாதவர் வண்மை, குலம்
கோத்திரம்இ, கல்வி, குணம், குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பாரெங்குமே.

### 68. நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெறுக

பாரும், புனலும், கனலும், வெங்காலும், படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

### 69. சகல சௌபாக்கியங்களும் அடைய

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைகட்கண்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 70. நுண் கலைகளில் சித்தி பெற

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே.

### 71. மனக்குறைகள் நீங்க

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதவல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமளக் கொம்பிருக்க
இழவுற்று நின்றுநெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே.

### 72. பிறவிப் பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார் துறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்?
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே.

### 73. குழந்தைப்பேறு உண்டாக

தூமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

### 74. தொழிலில் மேன்மை அடைய

நயனயங்கள் மூன்றிடை நாதனும், வேதமும், நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடியிணையப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும்,பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 75. விதியை வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர்இ மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் அழியும்! ஈரேழ்புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

### 76. தனக்கு உரித்தானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின்கோலம் எல்லாம் நின் குறிப்பறிந்து
முறித்தேன் மறலிவருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வேறத்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
புறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

### 77. பகை அச்சம் நீங்க

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா
வயிரவிஇ, மண்டலி, மாலினிஇ, சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

### 78. சகல செல்வங்களையும் அடைய

செப்பும், கனக கலசமம் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி! ஆணிதிரளக்
கொப்பும், வயிரக்குழையும், விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே.

### 79. கட்டுகளில் இருந்து விடுபட

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று எம் பாவங்கனே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 80. பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா! எண்கண் ஒடியவா! துன்னை உள்ளவண்ணம்
காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!
ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.

### 81. நன்னடத்தை உண்டாக

அணங்கே! அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.

### 82. மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக்கரணங்கள் விம்மி, கரைபுரண்டு
வெளியாய்விடின், எங்ஙனே மறப்பேன் நின்விரகினையேன்.

### 83. ஏவலர் பலர் உண்டாக

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிராவதமும், பகீரதீயும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே.

### 84. சங்கடங்கள் தீர

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சுடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்குநண்ணூல்
இடையாளை, எங்கள்பெம்மான் இடையாளை, இங்கு என்னை இனிப்
படையாளை, உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 85. துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதோறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும் என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்துமாலையுமே.

### 86. ஆயுத பயம் நீங்க

மாலயன் தேடஇ மறைதேடஇ வானவர் தேடஇ நின்ற
காலையும்இ சூடகக் கையையும்இ கொண்டுஇ கதித்தகப்பு
வேலை வெங்காலான் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும், பாகையும் போலும் பணிமொழியே.

### 87. செயற்கரிய செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் உட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால்! விழியால் மதனை
அழிக்கம் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

### 88. எப்போதும் அம்பிகை அருள்பெற

பரம் என்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரம்அன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர் தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில்வாங்கிய போதில் அயன்
சிரம்ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே!

### 89. யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கும் தரும்இ நின் துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவற்ற, அறிவு
மறக்கும் பொழுது என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *90. கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க*

வருந்தா வகைஎன் மனத்தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

### *91. அரசாங்கச் செயலில் வெற்றி பெற*

மெல்லிய நுண் இடைமின் அனையாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன் அனையாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம்தருமே.

### *92. மனநிலை பக்குவமடைய*

பதத்தே உருகி நின்பாதத்திலே மனம் பற்றி உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனியான் ஒருவர்
முதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

### *93. உள்ளத்தில் ஒளி உண்டாக*

நகையே இஃதிந்த ஞாலம் எல்லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

### *94. மனநிலை தூய்மையாக*

விரும்பித் தொழும் அடியார் விழிநீர்மல்கி மெய்புளகம்
அரும்பி, ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி முன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**95. மன உறுதி பெற**

நன்றே வருகினும்இ தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே! அருட்கலமே! இமவான் பெற்ற கோமளமே!

**96. எங்கும் பெருமை பெற**

கோமள வல்லியை அல்லியம் தாமரைக்கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

**97. புகழும் அறமும் பெற**

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன், புகாரி, முராரி, பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

**98. வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற**

தைவற்து நின்னடித் தாமரைசூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவற்த ஆறும் கரந்தது எங்கே?
மெய்வந்த நெஞ்சில் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புக அறியா மடப்பூங்குயிலே.

**99. அருள் உணர்வு வளர**

குயிலாய் இருக்கும் கடம்படாவியிடை கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 100. அம்பிகையை மனத்தில் காண

குழையைத் தழுவிய ஒன்றை அம்தார் கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும், கரும்புவில்லும்
விழையப்பொருதிறல்வேரி அம்பாணமும் வெண்ணகையும்
உழையப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றனவே.

### 101. நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டம் எல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத்தாளை, புவிணடங்காக்
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும், கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு
இல்லையே.

***கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்***
***கபடு வராத நட்பும்***
***கன்றாத வளமையும் குன்றாத இளமையும்***
***கழுபிணியிலாத உடலும்***
***சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்***
***தவறாத சந்தானமும்***
***தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்***
***தடைகள் வராத கொடையும்***
***தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு***
***துன்பமில்லாத வாழ்வும்***
***துய்யனின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய***
***தொண்டரொடு கூட்டு கண்டாய்***
***அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே***
***ஆதிகடவூரின் வாழ்வே!***
***அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி***
***அருள்வாமி! அபிராமியே!***


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

கடந்த 01.02.2021 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வம் அமரர் அருணாசலம் கந்தையா அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஓடோடி வந்து கனடா, ஜேர்மனி, வவுனியா, வட்டக்கச்சி ஆகிய இடங்களில் வசிக்கும் பிள்ளைகளின் இல்லத்திற்கு வருகை தந்து துன்பத்தில் பங்குகொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலியை பதாகைகள் மூலம் தெரிவித்தோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வில் கலந்து சிறப்பித்தோருக்கும், இக்கிரியைகளை முறைப்படி ஆற்றிய ஆச்சாரியர்களுக்கும் நினைவு மலருக்கான ஆக்கங்களை தந்து உதவியோருக்கும் இம்மலரினை நேர்த்தியாக அச்சிட்டு உதவிய பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அருணாசலம் கந்தையா அவர்களின்
# வம்ச சரிதம்

*அருணாசலம் + *பார்வதிப்பிள்ளை *சின்னையா + *கதிராசிப்பிள்ளை

*சரஸ்வதி
*கந்தையா
*வேலுப்பிள்ளை
*வள்ளியம்மை
*மயிலாத்தை

*வேலுப்பிள்ளை
*நல்லதம்பி
*சின்னத்தங்கம்
*சிவபாக்கியம்

மனோன்மணி + அதிட்டலிங்கம் —— ரோபிணி + நந்தகுமார்
நிதர்சன்

சேதுகாவலர் + யோகேஸ்வரி —— அனோஜன் சஜிதன்
அபிநயா

காந்தருபி + காசிலிங்கம் —— சங்கீர்த்தன், தனுஷா

சறோஜினிதேவி + மகேந்திரன் —— புருசோத்தமன் கிருபன்

தங்கேஸ்வரன் + சந்திரவதனி —— விதுஜன், சங்கவி

மனோரஞ்சிதமலர் + தனபாலசிங்கம் —— தர்சன் + யாமினி
திவாகரன், மதுரா

நகுலேஸ்வரன் + கார்த்திகா —— ஆதித்தியன், ஆரிஷா

வனஜா + சிறிகரன் —— சாரங்கன், தனுஷ், அபிரா

கிரிஜா + கபிலன் —— எய்டன்அக்சன் காவின்கோபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக்கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக்கேட்டேன்
பகிர்ந்து பார் என இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனின் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக்கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது யாதெனக்கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கை யெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக்கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் நெருங்கி
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

கவிஞர் கண்ணதாசன்

தனு பிறிண்டேர்ஸ் தொ.பே : 0776115301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org